**பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

# தேயிலை ஆராய்ச்சி சபை

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## வெற்றிடங்கள்

தலவாக்கலையில் அமைந்துள்ள சென் கூம்ஸ் தோட்டம் மற்றும் இரத்தினபுரியில் அமைந்துள்ள புனித ஜோகிம் தோட்டம் ஆகிய இடங்களில் நிலவும் வெற்றிடங்களாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சென் கூம்ஸ் தோட்டம், தலவாக்கலை

- நிர்வாக அதிகாரி (01)
- சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி (01)
- கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி (01)
- ஓட்டுநர் (02)

சென் ஜோகிம் தோட்டம், இரத்தினபுரி

- கனிஷ்ட உதவி எழுவினைஞர் (01)
- கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி (02)
- தொழிற்சாலை பொறிவினைஞர் (01)

### 1. நிர்வாக அதிகாரி

**வேலை விபரம்**

தோட்டத்தில் முகாமைத்துவம் மேற்கொள்ளும் குறித்த விபரங்களை வழங்கல், கணக்கு செயற்பாடுகள், மதிப்பீட்டை மேற்கொள்ளல் மற்றும் தோட்டக் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி தேவையான நடவடிக்கைகளுக்கு பங்கேற்றல் மற்றும் தோட்டக் கண்காணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மதிப்பீடு, முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்குகளை குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்தல் உட்பட தோட்ட அலுவலக செயற்பாடுகள் அனைத்துக்கும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது) தலைமை எழுதுவினைஞராக குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் மற்றும் சிரேஷ்ட எழுதுவினைஞராக குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் அவசியமாகும்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 32 வயதுக்கு குறையாத மற்றும் 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

### 2. கனிஷ்ட உதவி எழுதுவினைஞர்

**வேலை விபரம்**

தலைமை எழுதுவினைஞர்/ சிரேஷ்ட உதவி எழுதுவினைஞரின் மேற்பார்வையின் கீழ் பிரிவு (divisional) செயற்பாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள் உட்பட பிரிவு சரிபார்ப்பு (divisional), புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கையாளுதல் மற்றும் கணக்கிடுதல்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது) பயிற்சி பெற்ற Check Roll எழுதுவினைஞர் ஒருவராக அனுபவம் அவசியம்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாத மற்றும் 14 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

### 3. சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி

**வேலை விபரம்**

தொழிற்சாலை அதிகாரியின் (Factory Officer)/ தோட்டக் காண்காணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் தேயிலை செயலாக்கத்தின்போது தொழிற்சாலை அதிகாரிக்கு உதவுதல் மற்றும் குறித்த புத்தகம், அறிக்கை போன்றவற்றை பேணும் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் மற்றும் செயற்படுத்தல்.

கல்வித் தகைமை மற்றும் அனுபவம்

க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது) உதவி தொழிற்சாலை அதிகாரி ஒருவராக 05 ஆண்டுகள் அனுபவம் அவசியம்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 25 வயதுக்கு குறையாத மற்றும் 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

### 4. கனிஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரி

**வேலை விபரம்**

தொழிற்சாலை அதிகாரியின்/ சிரேஷ்ட உதவி தொழிற்சாலை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தேயிலை செயலாக்க தொழிற்சாலை அதிகாரிக்கு உதவுதல்.

கல்வித் தகைமை மற்றும் அனுபவம்

க.பொ.த. (சா.தர) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் எண் கணிதம்/ கணிதத்துடன் (தோட்டத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது) பயிற்சி பெற்ற தொழிற்சாலை கண்காணிப்பாளராக அனுபவம் அவசியம்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

### 5. ஓட்டுநர்

**வேலை விபரம்**

வாகனத்திற்கு பொறுப்பாக செயற்படுதல் மற்றும் பச்சை இலை வகைகள் மற்றும் நோயாளர்களை அழைத்துச் செல்லல், வாகனத்தில் ஏற்படுகின்ற சிறிய பழுதுபார்த்தல்கள் மற்றும் நாளாந்த பராமரிப்புகள் மற்றும் தினசரி பதிவுகள் (Daily records) மற்றும் பயண சிட்டை (Trip Chit) வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளை தோட்டக் கண்காணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளல்.

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்**

தரம் 08 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை (கனரக வாகனங்களை செலுத்துவதற்கு) பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற பின் அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனம் ஒன்றில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் குறைந்தது நான்கு (04) ஆண்டுகள் அனுபவம் அவசியமாகும்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

### 6. தொழிற்சாலை பொறிவினைஞர்

**வேலை விபரம்**

தொழிற்சாலை இயந்திரங்களின் அனைத்து சிறிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு தோட்டக் கண்காணிப்பாளர்/ தொழிற்சாலை அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் அனைத்து தொழிற்சாலை இயந்திரங்களின் பதிவுகளை முறைப்படி பேணுதல் வேண்டும்.

கல்வித் தகைமை மற்றும் அனுபவம்

தரம் 08 இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு பொறிவினைஞராக குறித்த துறையில் 04 ஆண்டுகள் அனுபவம் அவசியம்.

**சம்பளம்** : தோட்ட பணிக் குழுவின் கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பேசி தீர்மானிக்க முடியும்

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது).

**வேறு நன்மைகள்**

- தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டங்களினால் நிர்ணயிக்கப்பட்ட வகையில் பதவிக்கு தொடர்புடைய மேலதிக வசதிகள் வழங்கப்படும்.

இந்தப் பதவி நிரந்தரமானது. தேர்வு செய்யப்பட்ட பணியின் தேவைக்கு அமைய தலவாக்கலை சென் கூம்ஸ் தோட்டம்/ இரத்தினபுரி சென் ஜோகிம் தோட்டம் அல்லது இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் வேறு தோட்டங்களில் பணியாற்றுவதற்கு வேண்டி ஏற்படும்.

முழுமையான சுயவிபரக் கோவை அல்லது விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று, குறித்த கல்வி மற்றும் ஏனைய தொழில் தகைமைகளின் நிழல் பிரதிகள், பணி சான்றிதழ்களின் நிழல் பிரதிகள், மற்றும் விண்ணப்பதாரரின் திறனை மதிப்பிட முடியுமான வகையில் உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரியுடன் 2024 டிசம்பர் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே கையொப்பம் இட்ட நபருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அவசியமாகும். மேலும், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுவது அவசியமாகும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளில் பணியாற்றும் அதிகாரிகள் அனுப்புகின்ற விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். இந்தத் தேவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தயவுடன் மேலதிக விபரங்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**சென் கூம்ஸ், தலவாக்கலை**